# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2383/06 - 2024 මැයි මස 06 වැනි සඳුදා - 2024.05.06

*2383/06 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையினது சேவைப் பிரமாணக் குறிப்பு**

திருத்த இலக்கம் 04

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பின்வரும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் திருத்தப்பட்ட 2013, திசெம்பர் மாதம் 11 ஆந் திகதிய 1840/34 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பின்வரும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையினது சேவைப் பிரமாணக் குறிப்பை இங்கு குறிப்பிடப்பட்டுள்ளபடி திருத்தியமைப்பதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழு பணித்துள்ளது.

திருத்த இலக்கம் 01 - 2017, ஒகத்து மாதம் 16 ஆந் திகதிய 2032/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்

திருத்த இலக்கம் 02 - 2018, சனவரி மாதம் 04 ஆந் திகதிய 2052/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்

திருத்த இலக்கம் 03 - 2019, செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதிய 2140/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்

1. 7 ஆம் பந்தியின் 7.2.2.1 (அ) பகுதி பின்வருமாறு திருத்தியமைக்கப்படுதல் வேண்டும்.

7.2.2.1 கல்வித் தகைமைகள் :

(அ) மொழி (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) மற்றும் கணிதம் உட்பட நான்கு பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத்தராதரச் சான்றிதழ் (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

(கல்விப் பொதுத் தராதரச் சான்றிதழ் (சாதாரண தரம்) பரீட்சையில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டிய மொழியாகக் கருதப்படுவது விண்ணப்பதாரி முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் ஊடக மொழியாகும்.)


1A - G 41880 — 05 (2024/05)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. 7 ஆம் பந்தியின் 7.2.2.1 (ஆ) பகுதிக்குப் பின்னர் பின்வரும் குறிப்பு உள்ளடக்கப்படல் வேண்டும்.

**குறிப்பு**.- (கல்விப் பொதுத் தராதரச் சான்றிதழ் (சாதாரண தரம்) மற்றும் கல்விப் பொதுத் தராதரச் சான்றிதழ் (உயர்தரம்) பரீட்சைக்கு சமமான வேறு உள்நாட்டு அல்லது வெளிநாட்டுக் கல்வி நிறுவனங்களினால் நடாத்தப்படும் பரீட்சையொன்றுக்குத் தோற்றி பெற்றுக்கொண்டுள்ள தகைமையொன்றை நியமனம் வழங்குவதற்காக ஏற்புடையதாக்கிக் கொள்வது தொடர்பிலான இறுதித் தீர்மானம், ஏற்புடைய கல்வி நிறுவனங்களினால் மற்றும் பரீட்சை ஆணையாளர் நாயகத்திடமிருந்து உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் எடுக்கப்படும்.

**எஸ். ஆலோக பண்டார**,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

EOG 05-0036

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.